**Judicial Form No**.53

(See Rule 42)

**DEPOSITION OF WITNESSES**

(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 40 of 2022

Depositions of PW -4 witness for ________ (Prosecution / Defence / Court)

Name : திரு. பழனியாண்டி

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1.நான் தமிழ்நாடு காவல்துறையில் பணி செய்து ஓய்வு பெற்று தற்போது பொள்ளாச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 24.06.2021 ஆம் தேதி சூலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது ராமகிருஷ்ணன் என்பவர் நிலையம் கொடுத்த எழுத்து மூலமாக புகாரிணை பெற்று வழக்கின் தன்மைப்படி சூலூர் காவல் நிலைய குற்ற எண் 647/2021 சட்டப்பிரிவுகள் 287 338 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ** 2 குறியீடு செய்யப்படுகிறது அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்து ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே மாலை 4:30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பொன்னிமுத்து மற்றும் ராஜன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் **அ.சா.ஆ** 3 குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம்**அ.சா.ஆ** 4 குறியீடு செய்யப்படுகிறது.

2.பின்னர் சாட்சிகள் ராமகிருஷ்ணன், லாரன்ஸ், சந்தோஷ் சப்பல் மற்றும் முத்து ராஜன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கில் காயம் அடைந்த ராமகிருஷ்ணன் அவர்களுக்கு சிகிச்சை அளித்த கங்கா மருத்துவமனை மருத்துவர் கிருஷ்ணகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றேன். காயச்சான்று **அ.சா.ஆ 5** குறியீடு செய்யப்படுகிறது.மேலும் இவ்வழக்கின் எதிரி தன்னிச்சையாக நிலையம் ஆஜரானவரை 25.06.2021 ஆம் தேதி கைது செய்து நிலைய ஜாமினில் விடுவித்தேன். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 287 மற்றும் 338 இன் கீழ் 26.06.2021 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கானது டிபி மில் டெக்ஸ்டைல் நிறுவனத்தில் ஏற்பட்ட சம்பவத்திற்கு போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். நேரடியாக குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரி மேற்படி நிறுவனத்தின் மேலாளர் அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் தான் ராமகிருஷ்ணன் அவர்கள் பணி செய்துள்ளார் .மேற்படி எதிரி நிறுவனத்தின் மேலாளர் என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்திற்கு உரிமையாளர் உள்ளார் என்றால் சரிதான். நான் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளரை இவ்வழக்கில் விசாரித்து சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 12.03.2021 தேதி நடைபெற்றுள்ளது என்றால் சரிதான் 105 நாட்கள் காலதாமதம் ஆகத்தான் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தையும் அவர் அளித்த புகாரிலேயே குறிப்பிட்டு அளித்துள்ளார். மேலும் ராமகிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய முதலாளி தனக்கு கை பொருத்தி தருவதாக கூறினார் என்றும் அவர் சொன்னவாறு செய்யாததால் தான் புகார் அளிப்பதாக சொல்லி உள்ளார்.

2. மேற்படி இயந்திரத்தை பறிமுதல் செய்து ஆய்வுக்கு உட்படுத்தினேனா என்றால் ஆய்விற்கு உட்படுத்தவில்லை. நான் விசாரித்த சாட்சி லாரன்ஸ் அவர்கள் மேற்படி இயந்திரம் பழைய இயந்திரம் என எனது விசாரணையின் பொழுது சொல்லியுள்ளார். Inspector of factories அவர்களை விசாரித்து அவரிடம் இருந்து எந்த வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி மேற்படஅஜ நிறுவனத்தின் மேலாளர் இல்லை என்றும் மேற்படி அன்றாட நிகழ்வுகளை மேற்படி நிறுவனத்தில் கவனிப்பவர் வேறு ஒரு நபர் என்றால் சரியல்ல .எதிரியின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.25 19:47:58 +0530